Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

(கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

கோயம்புத்தூர் - 641 021.

# தமிழில் பிற துறைகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

21 நவம்பர் 2015, சனிக்கிழமை

தமிழ்த்துறை

Scanned with CamScanner

## நூல் பற்றிய விவரங்கள்

# தமிழில் பிற துறைகள்


| | | |
|---|---|---|
| பொருள் | : | தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் |
| மொழி | : | தமிழ் / ஆங்கிலம் |
| நூல்அளவு | : | டெமி 1/4, புள்ளி 11 |
| படிகள் | : | 150 |
| பக்கங்கள் | : | 400 |
| முதற்பதிப்பு | : | நவம்பர் 2015 |
| விலை | : | 400/- |
| அச்சு | : | ஏசியன் அச்சகம், சுந்தராபுரம், கோவை. |
| வெளியீடு/ உரிமை | : | தமிழ்த்துறை<br>கற்பகம் உயர்க்கல்விக் கலைக்கழகம்<br>கோவை – 21 |
| ஐ.எஸ்.பி.என். எண் | : | 978 - 81 – 928302 – 3 – 0 |


## BIBLIOGRAPHICAL DATA

# TAMIZHIL PIRA THURAIGAL


| | | |
|---|---|---|
| Subject | : | Tamil Research Articles |
| Language | : | Tamil |
| Book size | : | 1/8 |
| Pages | : | 400 |
| First edition | : | November,2015 |
| Price | : | 400/- |
| Printing | : | Asian achagam<br>Sundrapuram,covai. |
| Publication/Rights | : | Dept of tamil,<br>Karpagam Academy of Higher Education,<br>Coimbatore-641021. |
| ISBN Number | : | h978-81-928302-3-0 |


Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| 98. | புறநானூற்றில் அறச்சிந்தனைகள் - முனைவர் சு.பாஸ்கர் | 284 |
| 99. | பழந்தமிழ் இலக்கியங்களில் பறவைகள் - டி.குமாரன் | 286 |
| 100. | சங்க இலக்கியத்தில் வழிபாடுகள் - பா.அருள்ஜோதி | 289 |
| 101. | சங்க இலக்கியங்கள் உணர்த்தும் சுற்றுச்சூழல் - முனைவர் க.தனலட்சுமி | 292 |
| 102. | தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் - மு.ஜமுனா | 294 |
| 103. | பெண்ணியத் திறனாய்வு - முனைவர் அ.ஸ்ரீதேவி ராமலிங்கம் | 295 |
| 104. | பாரதக் கதையில் கர்ணன் - முனைவர் அ.பிரசில்லா | 297 |
| 105. | பழந்தமிழ் இலக்கியத்தில் தலைமைப்பண்புகள் ப.கணேஷ் வடிவேல். | 301 |
| 106. | பாலக்காடு மாவட்டத் தமிழின மக்களிடையே வழக்கிலிருக்கும் நம்பிக்கைகள் ஒரு பார்வை - முனைவர் செ.ஆறுச்சாமி | 304 |
| 107. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு - ம.வடிவேல் [1] முனைவர் V.ஜெயபால்[2] | 309 |
| 108. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு ம.வடிவேல்[1] முனைவர் V.ஜெயபால்[2] | 313 |
| 109. | வள்ளுவத்தில் விலங்கியல் சிந்தனைகள் - முனைவர் க.லதா | 319 |
| 110. | பாவண்ணன் படைப்பில் தொன்மச் சிந்தனைகள் - க.ரேவதி | 321 |
| 111. | புறப்பொருள் வெண்பாமாலையில் நாட்டுப்புறவியல் கூறுகள் - முனைவர் சி.சொர்ணமாலா | 323 |
| 112. | காளமேகம், கம்பர் பாடல்களில் உணவியல் - திருமதி ச.அ.சுஜா | 325 |
| 113. | தமிழிசைப்பாடல் பரிபாடலில் இசைக்கூறுகள் - முனைவர் நா.ரேணுகா | 327 |
| 114. | தொகை நூல்களுள் உணவியல் கூறுகள் - முனைவர் இரா.பொன்னி | 330 |
| 115. | படைப்புகள் உணர்த்தும் படிப்பினைகள் - முனைவர் இரா.ஏஞ்சல் | 332 |
| 116. | உயிருக்குள் தாகத்தில் சமூகச் சிந்தனைகள் - நா.கிருஷ்ணராஜ் | 336 |
| 117. | நோய் தீர்க்கும் நட்சத்திர மரங்கள் - சித்திரை நட்சத்திரம் - வில்வமரம் இரா. புருஷோத்தமன்,. முனைவர் கனேசன்.ஆ. | 340 |
| 118. | வெள்ளெருக்கும் திருவோண நட்சத்திரமும் -புருஷோத்தமன்.இரா, முனைவர் கனேசன்.ஆ | 342 |
| 119. | கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் நாட்டுப்புறத் தொழில்சார் நுட்பங்கள் - முனைவர் பொ.சுதாராணி | 344 |
| 120. | தமிழில் கணிதம் - முனைவர் ப. கோமதி சுப்பிரமணியம் | 346 |
| 121. | சான்றோர்களின் படைப்பில் பெண்ணியம் - ச.தனலெட்சுமி | 348 |
| 122. | தீர்த்தங்களும் தெய்வ நம்பிக்கைகளும் மதுரைப்பகுதி ஓர் ஆய்வு - சி.மாணிக்கராஜ் | 352 |
| 123. | சிலம்பில்இனவரைவியல் - முனைவர் த.கவிதா | 356 |
| 124. | மதுரைக்காஞ்சி பகரும் திருவிழாக்கள் - மு.துர்க்கா | 359 |
| 125. | கவிஞர் செ.கனிமொழியின் கவித்திறம் - முனைவர் க.லட்சுமி | 361 |
| 126. | பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குழந்தை உளவியல் - க.மீனாட்சி, முனைவர் ப.தமிழரசி | 363 |
| 127. | தமிழர் பாதுகாப்பு அரண் – முனைவர் த. பாலமுருகன் | 367 |
| 128. | கவிஞர் கே. ரவியின் மின்னற்சுவை - முனைவர் ச.கவிதா | 370 |
| 129. | வள்ளுவர் மற்றும் பர்துருஹரியார் போற்றும் நட்பு – சீ.மாலதி, முனைவர் ச.கவிதா | 373 |




Scanned with CamScanner

வலியுறுத்தியுள்ளார். சுழல் எனும் கதையின்வழி ஆதிக்கவர்க்கத்தினர், ஆளுவோர் தங்களின் நலனை முன்னிறுத்தி பெண் இனத்தைச் எங்ஙனம் சிதைத்துள்ளனர். பெண்ணின் மனஉணர்வு, வலி, வேதனைகள் மறைக்கப்பட்டிருப்பதையும் விளக்கியுள்ளார். சீதை விசுவாமித்திரரிடம் கேள்வி கேட்பதன் வழியாக ஆளும் வா்கத்தினரின் எதேச்சதிகாரப்போக்கு கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. சீதை குறித்து வஞ்சகமாகப் பேசிய வண்ணானும் அவனது மனைவியும் சீதையை குலதெய்வமாக எண்ணிக் காப்பதாக கூறுவது மனிதனின் மனோநிலை மாற்றத்தைச் சுட்டுவதாக அமைகின்றது. குகனின் கேள்விகள் பாமரனும் அரசின் அநீகளைத் தட்டிக்கேட்பான் என்பதை உணர்த்துகின்றது.வாழ்வு தற்செயல்களின் தொகுப்பு என்ற விசுவாமித்திரரின் கூற்று சிந்திக்கத்தக்கது. அரசுக்கு சரி என்று படுவது பாவமான, இழிவான செயலாக இருந்தாலும் பொதுமக்கள் அதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். ஏன் என்று கேட்பது தவறு, ஏன் என்று கேட்டாலும் நீதி கிடைக்காது என்ற உண்மையை மிக அழகாக இலட்சுமணன்,குகன், சீதை போன்ற பாத்திரங்களின் வழி உணர்த்தியுள்ளார். பெண்மையை மதிக்காது, அவளது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது போனால் சமூகம் நிலைக்காது என்ற உண்மையை உணர்த்தியுள்ளார். மரபு வழிச்சிந்தனைகளும் இவரது படைப்பில் இடம்பெற்றுள்ளது. சீதை தனக்கு ஏற்பட்ட களங்கத்தை தனக்கு பிறக்கப்போகும் குழந்தை போக்குமா என்று கேட்கிறாள். இவரது மீட்டுருவாக்கக் கதைகளின் வழியாக பெண்ணினத்தின் இன்றியமையாமை, பெண்களின் உணர்வு வெளிப்பாடு போன்றவற்றை அறியமுடிகின்றது.

-------------------

## 111.புறப்பொருள் வெண்பாமாலையில் நாட்டுப்புறவியல் கூறுகள்

முனைவர் சி. சொர்ணமாலா,உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை

தொல்காப்பியம் தமிழுக்குக் கிடைத்த அரிய இலக்கணக் கருவூலம். எழுத்து, சொல், பொருள் என அனைத்திற்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் செய்யுளியலில் யாப்பு குறித்துப் பேசும்பொழுது அவரின் நாட்டுப்புற இலக்கியம் சார்ந்த சிந்தனை (தொல்.செய். 79, பொருள் 164, 165, 180) வெளிப்படுகின்றது. இதுபோல் வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரியையும் எல்லைகளாகக் கொண்ட தமிழக மக்களுக்குப் புறப்பொருள் இலக்கணத்தை எடுத்தியம்பும் நூல் புறப்பொருள் வெண்பாமாலை. வெண்பாக்களால் இதனை உருவாக்கியவர் ஐயனாரிதனார். இந்நூலில் நாட்டுப்புறவியல் கூறுகளான, பண்டைத் தமிழ் மக்களின் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் விரவிக்கிடக்கின்றன. அவற்றை வெளிக்கொணர்தலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**நம்பிக்கைகள்**

மக்களிடையே தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருவன நம்பிக்கைகள். ஆதிமனிதன் இயற்கையுடன் இயைந்து வாழ்ந்த காலங்களில் அதுவே அவனுக்குப் போராட்டக் களமாகியது. அப்போராட்டக் களத்தில் எதிர்த்து நிற்கமுடியாத நிலையில், அச்சத்தால் சிலவற்றின்மீது அவன் நம்பிக்கைகளை உருவாக்கினான். இதனை, 'நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியனவாகவே காட்சித் தருகின்றன. மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகின்றது' என்னும் க. காந்தியின் (தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 15) கூற்று உறுதிப்படுத்துகின்றது. இந்த நம்பிக்கைகள் பரந்துபட்டவை. இலக்கியங்களில் விரிந்து வளர்ந்த இந்த நம்பிக்கைகள் இலக்கணங்களில் விதைக்கப்பட்டவை. அவ்வகையில் புறப்பொருள் வெண்பாமாலையில் இறைகுறித்த நம்பிக்கை, நடுகல் வழிபாடு, பேய்குறித்த நம்பிக்கை, நிமித்தம், விரிச்சி குறித்த நம்பிக்கை, சகுனம், நாள்கோள் பார்த்தல், ஊழ், நிலையாமை குறித்த நம்பிக்கை எனப் பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

**இறை நம்பிக்கை**

அச்சத்தால் இயற்கையை வழிபட்ட மனிதன் தன் குடும்பம், உற்றார் உறவினர் ஆகியோருக்காக மட்டுமின்றி நாட்டை ஆண்ட மன்னன், ஊர்மக்கள் ஆகியோருக்காகவும் இயற்கையை மீறிய சக்தி எனப் பல்வேறு தெய்வங்களைப் படைத்து அவற்றின் மீது தனது வழிபாட்டு நம்பிக்கையை வைத்தான். பண்டைய மக்கள் சிவன், திருமால், முருகன், கொற்றவை ஆகிய தெய்வங்களை வழிபட்டனர். குறிப்பாகப், புறப்பொருள் வெண்பாமாலையில் மகளிர் தம் கணவன் மேற்கொண்ட தொழில் நன்றாக முடியவேண்டும் என எண்ணி வள்ளிக்கூத்து ஆடி வழிபட்டனர் என்னும் செய்தி காணப்படுகின்றது. முருகனின் வேலைக் கையில் கொண்டு ஆடுபவனாகிய வேலனுடன் தம்மை வள்ளியாக எண்ணி, தெய்வம் ஏறப்பெற்று ஆவேசம் கொண்டு ஆடினர். (வெட்சி : வெறியாட்டுத் துறை) மகளிர் குரவைக்கூத்து ஆடிய செய்தியும் (தும்பைப்படலம்) இங்குக் காணப்படுகிறது. பொதுவாகக் கூத்து என்பது நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகளுள் ஒன்று. இந்நிகழ்வு முற்காலத்தில் இறைநம்பிக்கை அடிப்படையில் மகளிர் ஆடுகின்ற வழக்கமாக இருந்துள்ளமையைப் புறப்பொருள் வெண்பாமாலை வழி அறியமுடிகின்றது.

**கொற்றவை வழிபாடு**

பாலைநிலக் கடவுளான கொற்றவை வழிபாடு தொல்காப்பியர் காலத்திலேயே இருந்துள்ளது. சிலம்பில் வேட்டுவ வரி என்னும் காதையில் (67-70) கொற்றவை குறித்த செய்திகள் காணப்படுகின்றன. வெற்றிக்குக் காரணமானவள் கொற்றவை (தற்காலத்தில் துர்க்கை) என்னும் நம்பிக்கை புறப்பொருள் வெண்பாமாலையில் வெளிப்படுகின்றது. ஆநிரையைக் கவரச் செல்லும் வீரர்களின் வீரத்தெய்வம் கொற்றவை என்னும் செய்தி வெட்சித்திணையில் காணப்படுகின்றது. கொற்றவையை 'ஒளியின் நீங்கா விறல் படையோள்' (வெட்சி : கொற்றவை நிலைத்துறை) என்று சிறப்பிக்கும் வெண்பாமாலை அதனைப் போருக்குரிய தெய்வமாகக் குறிப்பிடுகின்றது.



Scanned with CamScanner